சிவமயம்

மதுரைமாநகரில் கோவில்கொண்டிருக்கும்

ஸ்ரீ குட்டயஞானதேசிக சுவாமி

அவர்கள் மீது

இளையான்குடி வேதாந்தமடம்

ஸ்ரீ சிவானந்த சுவாமி அவர்கள்

பாடிய தோத்திரப் பாக்கள்

மூலமும் உரையும்

தேவகோட்டை

கி. கரு. ராம. சாமிநாதன் செட்டியார்

சஷ்டியப்த பூர்த்தி சாந்தி

ஞாபகார்த்த வெளியீடு

பரிதாபி-ஞு ஆனி-மீ 26உ

உ

சிவமயம்

மதுரைமாநகரில் கோவில்கொண்டிருக்கும்

ஸ்ரீ குட்டயஞானதேசிக சுவாமி

அவர்கள் மீது

இளையான்குடி வேதாந்தமடம்

ஸ்ரீ சிவானந்த சுவாமி அவர்கள்

பாடிய தோத்திரப் பாக்கள்

மூலமும் உறையும்

தேவகோட்டை

கி. கரு. ராம. சாமிநாதன் செட்டியார்

சஷ்டியப்த பூர்த்தி சாந்தி

ஞாபகார்த்த வெளியீடு

பரிதாபி-ஸு ஆனி-மீ 26௨

உ
சிவமயம்

முகவுரை

மலர்தலை யுலகில் தலைசிறந்த புண்ணிய பூமியாகிய பரத கண்டத்திற்கு வதன மெனத் திகழ்வது பாண்டி வளநாடே. அதன் திலக மென விளங்குவதும் நால்வர் தேவார திருவாசகப் பாசுரங்களினால் தோத்தரிக்கப் படுவதும் மீனாக்ஷி சுந்தரேஸர் முருகப் பெருமான் இவர்களால் ஆட்சி புரிந்ததும் சிவராஜதானி, சீவன் முத்தித்தலம், துவாத சாந்தத்தலம், எனப் புகழப்படுவதும் ஆகிய பெரும்பதி மதுரையம் பதியே

அதில் அமைந்துள்ள வீதிகளில் தெற்குவெளி வீதியின் தென்பாலுள்ள மடாலயத்தில் திருக்கோவில் கொண்டு விளங்கப் பெறும் ஸ்ரீலஸ்ரீ குட்டைய ஞான தேசிக சுவாமியவர்கள் தேவகோட்டை தனவைசியர் குலத்தில் ஐந்து வீட்டார் என்னும் கருப்பஞ் செட்டியார் வம்சத்தில் முத்துராமஞ் செட்டியாருடைய நான்காவது தவப்புதல்வராய் அவதரித்து நற்பருவம் வந்தவுடன் ஞானசாரியரை நாடி சமீவன க்ஷேத்திரம் என்னும் கோவிலூர் சென்று வேதாந்த மடத்தின்

குருமுதல்வராய் எழுந்தருளி யுள்ள ஸ்ரீலஸ்ரீ முத்து ராமலிங்க ஞான தேசிக பரமாசாரிய சுவாமிகளைச் சரண்புகுந்து ஆத்த முதலிய சதுர்விதப்பணி புரிந்து சிரவணாதிய செய்து ஞானம் அடைந்ததின் பின்னர் ஆசிரியரின் உத்தரவின்படி ஆலவாய் என்னும் க்ஷேத்திரத்தை யடைந்து, சிறப்பு மிகும் அந்த க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற மீனாக்ஷி சுந்தரேஸருக்கு திருப்பணி புரிய வேண்டும் என்னும் பேரவாவினால் பெரும் பொருள் சேகரித்து ஆலயத்துள்ள இரண்டு கெற்பக்கிரக விமானங்கிட்கும் துவசஸ்தம்பத்திற்கும் தங்கத் தகடு வேய்ந்தும் நந்தி மண்டபம் கட்டியும் ஆடி வீதி செப்பம் செய்தும் வெள்ளி வாகனங்கள் செய்தும் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் செய்தும் தன்னை வந்தடைந்த அதிகாரிகளுக்கு ஞானோபதேசம் புரிந்தும் வந்துள்ளார்கள்.

இத்தகைய மகோன்னத மகிமை வாய்ந்த ஸ்ரீ குட்டைய ஞானதேசிக சுவாமியவர்கள் மீது காளையார் கோவில் வேதாந்த மடத்தில் கோவில் கொண்டுள்ள ஸ்ரீலஸ்ரீ செல்லப்ப ஞானதேசிக பரமாசாரிய சுவாமியவர்களது சிஷ்யரும் பெரும் புலமை வாய்ந்தவர்களும் இளையான்குடி வேதாந்த மடத்திற்கும் இராமேஸ்வரம் சிவாஸ்ரமத்திற்கும் தலைவரும் ஆகிய ஸ்ரீலஸ்ரீ

சிவானந்த ஞான தேசிக சுவாமியவர்கள் பக்திபூர்வக மாக, பதிகமொன்று பாடி அதற்கு உரை எழுதியும் அப்படியே தமது குரு ஸ்ரீலஸ்ரீ செல்லப்ப ஞானதேசிக சுவாமியவர்கள் மீது ஒரு பதிகமும் அதற்கு உரையும் செய்துள்ளார்கள்.

இந்த இரு பதிகங்களையும் அதன் உரைகளையும் அச்சு வாகன மேற்றி அன்பர்கள் வாக்கு மனம் என்னும் மாபெரும் வீதிகளில் உலாவி வருமாறு செய்தவர் தனவைசிக குலதிலகர் தேவகோட்டை கி. கரு. ராம. சுவாமிநாதன் செட்டியார், அவர்களும் அவர்கள் வம்ச பரம்பரையும் தேக சவுக்கியமும் சர்வ பாக்கியமும் பெற்று நீடூழி வாழ வேண்டி இறைவன் திருவருளை வேண்டுகிறேன்.

இங்ஙனம்

அ. ரு. சங்கர சுவாமி

உ

ஸ்ரீ மதுரை மாநகரில் கோவில்கொண்டிருக்கும்

ஸ்ரீ குட்டைய ஞானதேசிக சுவாமி

அவர்கள்மீது

இளையான்குடி வேதாந்த மடம்

ஸ்ரீ சிவானந்த சுவாமி அவர்கள் பாடிய

தோத்திரப்பாக்கள் மூலமும் உரையும்

சிவமயம்

காப்பு

தெற்கு, முகமாகித் தென்கூடல், வீற்றிருக்கும்
முக்குறுணி, யைங்கரனே, முன்னிற்பாய்—தக்கசீர்க்
குட்டய தேசிகரின் குன்ருப் புகழ்விரிக்கத்
தட்டாமல் என்மனத்தே தான்

ஸ்ரீ குட்டய ஞானதேசிக சுவாமி

அவர்கள் வரலாறு

திருமக ளுறையும் பாண்டிய நாட்டில்
தேவகோட் டையிலினி துறையும்
பெருவளத் தனவை சியகுல மதனில்
பெருமிலுப் பைக்குடிக் கோயில்

திருமிகுகூடா மணிபுர முடையார்
திகழைந்து வீடுடை யவராய்ப்
பெருங்குடிக் கருப்பஞ் செட்டியார் நான்காய்ப்
பெறுமுத்து ராமெனும் புதல்வர்

முத்துரா மென்னும் வணிகரின் நான்காம்
முதன்மைசேர் முதல்வராய்த் தோன்றி
மெத்திய நாமம் ஆதப்பனென்று
மேலவ ராலிடப் பெற்று
பெத்தம தற்றக் கோவிலூர் சென்று
பெருமுத்து ராமதே சிகரால்
தத்துவ ஞான குட்டையா வென்று
சாற்றிடத் தகுதியும் பெற்ளூர்

எண்ணிய காலம் குருபணி யாற்றி
இறையருள் நிறையவே பெற்று
மண்ணுல கதனில் மாண்புடைத் தலமாம்
மதுரையம் பதியதை யடைந்து
கண்ணிய மான மடமொன்றை நிறுவிக்
கதியதை யடியவர்க் கருளி
நண்ணினூர் ஆல வாயரன் பதத்தில்
நவநவ பணிபல இழைத்தே

அத்தகு பெரியா ரடிபணிந் துற்ற
அடியரின் பரம்பரை வந்த
சித்தனு மிளசைச் சிவானந்த, னவர்மேற்
செப்பினன் பதிகம தொன்றைச்
சுத்தமா யிதனைத் துதித்திடு வோர்கள்
சுகமதை யடைவுடன் பெற்று
உத்தம மனையாள் தனங்குணம் புதல்வர்
உயர்தர பதமுஞ்சே ருவரே

முற்றும்.

1 *சோதி சதாசிவ ஆதி புராதன சுகுண*
வரோதய சுககன ரஞ்சித
வேத கீதாதிக னோதி விரிந்தவ விகிர்த
குணகர விகசித சுந்தர
நீத நிராமய நீதிக ளோதிய நிமல
பராபர நிதபத குட்டைய
பூதி சதாவணி ஞானிக ளால்மதி புனித
மனோகர புகுபத நீயருளே

இதன் பதப்பொருள், சோதி - பிரகாச வடிவரே - சதாசிவ - நித்திய மங்கள சொரூபரே - ஆதி-

முதன்மையானவரே - புராதன - பழமையானவரே - சுகுண - சுத்தமான சத்துவ குணம் நிறையப் பெற்றவரே - வரோதய - தெய்வ வரத்தால் (உயர் குடியில்) பிறந்தவரே - சுககன - ஆனந்த ரசம் உடையவரே - ரஞ்சித - பிரியமுடையவரே அதாவது சர்வஜனப் பிரியத்வம் உடையவரே - வேத - வேதம் ஆகமம் முதலியவற்றை - கீத - சங்கீத இங்கிதம் - ஆதிகள் - முதலியவற்ருல் - ஓதி - கற்றுத் துதித்து - விரிந்தவ - பரந்த புகழ் படைத்தவரே - விகிர்த - வெளிப்பட்ட - குணுகர - சற்குணங்கட்கு இருப்பிடமானவரே - விகசித - மலர்ந்த - அதாவது மிகுந்த - சுந்தர - அழகுடையவரே - நீத - நீதிகள் வாய்ந்தவரே - நிராமய - துன்பமற்றவரே - நீதிகள் ஓதிய - தன்னைச் சரணடைந்த பக்குவிகளுக்கு சன்மார்க்க உபதேசம் செய்தருளிய - நிமல - மலரகிதரே - பராபர - மிகவுயர்வானவரே - நிருபத - நித்தியமான பதவியைப் பெற்றவரே - பூதி - விபூதியை „ சதாவணி - சர்வ காலமும் தங்கள் திருமேனியில் தரித்துக்கொண்டிருக்கிற ஞானிகளால் மதி - ஞானவான்களால் அக்கிர கண்ணியமாகக் கருதத்தக்க புனித - பரிசுத்த

மானவரே - மனோகர - சந்தோஷமுடையவரே - குட்டைய - குட்டையாவெள்னும் திருநாமம் வாய்க்கப் பெற்ற தேசிக சிரோரத்தினமே நீ - தேவிரீர் - புகு பதம் - என்னுல் அடையத்தக்க (அனர்த்த நிவர்த்தி ஆனந்தப் பிராப்தி வடிவ) முத்தியை - அருள் - கருணைகூர்ந்து அபபோக்ஷ ஞான வாயிலாஜத் தந்தருள வேண்டும் பிரபு. ஏ அசை "பிரம்ஹ வித்து பிரஹ்மமே'' என்னும் சுருதியாலும் "ஈசனும் ஞானி" என்னும் சுருதியாலும் இந்த விதமும் இனிவரும் விதமும் புகழ்ந்து துதிக்கப்படுகிறது.

எட்டுறு சித்திக ளுற்றுறை வுற்றவ ஏக பராபர சோக
நிராகர.
கட்டறி வாரண துட்ட துராசர கட்டக மட்டரை விட்ட
துரந்தர.
பட்டுறு நற்றுகில் கட்டு பரம்பரி பாவன மீன விலோசனி
நல்கிய.
மட்டமு துற்றயில் குட்டைய, தேசிக மாதவ பதமலர்
நீதரு வாயே. 2

இ-ள் - உறு - (மணியாழி உலகமெல்லாம் கண நேரத்தில் சித்திர விசித்திர விநோதமாக. விளையாடி

வரத்தக்க, மகா மகிமை வாய்ந்ததும், யோக வன்மையால் அதிசுலபமாக வாய்க்கத் தக்கதுமாகப், பொருந்திய - எட்டுச் சித்திகள் - அஷ்டமா சித்திகளும் - உற்று - (குரு, சிவ, உமை, பக்தியால், கைவரப் பெற்று - உறைவுற்றவ - வசிக்கப்பட்டவரே - ஏக - அத்வைத - பராபர - உன்னத சொரூபரே - சோக நிராகர - சர்வதுக்க நிவர்த்தி பரமானந்தப் பிராப்தி, கைவரப் பெற்றவரே - கட்ட நிவாரண - (தன்னைச் சரணடைந்த பரிபக்குவிகளின், துன்பத்தை நிவர்த்தி செய்பவரே - துட்ட துராசர - தீய சுபாவத்தையும் கூடா வொழுக்கத்தையும் - அகம், கட்டு – மனதின் கண்ணே வைத்துள்ள - மட்டரை - அதமர்களின் சங்கத்தை - விட்ட - நீக்கியருளிய - துரந்தர - மனவலிமையுடையவரே - பட்டுறு - பட்டு நூற்களால் நெய்து எடுக்கப்பட்ட - நற்றுகில் - நல்ல புடவையை - கட்டு - அணிந்து கொண்டிருக்கிற பரம்பரி - மிசு மேன்மை வாய்ந்தவளும் - பாவன – பரிசுத்தமானவளும் – ஆகிய - மீன விலோசனி – மீனாக்ஷியம்மையாரால் – நல்கிய - (நந்தி மண்டபங் கட்டுவதற்காக. தூண்கள் கொண்டுவர. மலைக்குச் சென்றிருந்த போது அர்த்த ராத்திரியில் நித்திரை செய்யுங்கால் எழுப்பி உண்ணக் கொடுக்கப்பட்ட.

மட்டு அமுது - (அதிமதுரமான) அக்கார அடிசிலை - உற்று - (சந்தோஷமாகப்) பொருந்தி அயில் - உட்கொண்டருளிய - குட்டைய தேசிக மாதவ - குட்டைய ஞான தேசிகராகிய மகாதவ சிரேஷ்டரே - நீ - தேவரீர் - பாதமலர் - திருவடித் தாமரையை - தருவாய் - எளியேன் சிரசில் சூட்டியருள வேண்டும் பிரபு - ஏ - அசை -

முத்திநிதம்பெறு தத்துவ வித்தகர் மூதக சாதக வேதக
மேவிய.
அத்வித தத்துவ பெத்த மசுத்தமு மற்றெளிர் சுத்த
அரும்பெரு மாதவ
முத்துவி ராமெனு முத்தம போதக முனிவர விறைபத
முடிபுனை தேசிக.
உத்தம குட்டைய வுயர்மறை முடிவுரை உன்னத
பதமென துளமுற நீயருளே. 3

இ - ள் - முத்தி - (அனர்த்த நிவர்த்தி ஆனந்தப் பிராப்தி வடிவ) மோக்ஷத்தை - நிதம்பெறு - சாஸ்வதமாகப் பெற்ற - தத்துவ வித்தகர் - உண்மை ஞானிகளது - மூது அக - பெருமை வாய்ந்த உள்ளத்தினிடத்தில் - சாதக - உதயமாகத்தக்க - வேதக -

விசாரத்தால் - மேவிய - அடையத்தக்க - அத்வித தத்துவ - ஏக பரப்பிரஹ்ம சொருபரே - பெத்தம். அசுத்தமும் - கட்டும் களங்கமும் - அற்று ஒளிர் - நீங்கி விளங்குகின்ற - அரும் பெரும் சுத்த மாதவ - அருமையும் பெருமையும் வாய்ந்த - பரிசுத்த மகா தவசிரேஷ்டரே - முத்து ராமு எனும் - முத்து ராமலிங்கம் என்னும் திருநாமம் அமையப் பெற்ற வரும் - உத்தமபோதக - உயர்வான ஞானம் உடைய-முனி - மனன சீலர்களில் - வர - சிரேஷ்டமானவரும், ஆகிய - இறைபதம் - குருபரனுடைய திருவடித் தாமரையை - முடிபுனை - சிரசின் மீது சூடிக் கொள்ப வரும் - தேசிகவுத்தம - குரு சிரேஷ்டருமாகிய குட்டைய-குட்டைய ஞானதேசிகரே-உயர் மறை முடி-மேன்மை தங்கிய வேதாந்தங்களால் – உரை - பிரதி பாதிக்கத்தக்க - உன்னதபதம் - சர்வேதத் திருஷ்ட மான முத்தியானது - எனது உளம் உற - என் னுடைய இருதயத்தின் கண்ணே (பிராப்தத்தின் பிராப்தியாக அதாவது அடையப்பட்டதின் அடைவாக) தோற்றுமாறு - நீ - தேவரீர் - அருள் - அனுக்கிரகம் செய்வீராக - ஏ - அசை.

கொஞ்சு, குயின்மொழி வஞ்சிய ரஞ்சுதர் கோல
முறுந்தன மாதிய வாதைசெய்
நெஞ்சக, மஞ்சிய பஞ்சை மலர்க்கழல் நேசம
தாகவே தஞ்ச மடைந்தனன்
அஞ்ச லளித்தரு ளென்றணை யாண்டரு ளாரிய
குட்டய ஆண்டவ ரேகதி
விஞ்ச லளித்திடு வேதன மாக்கிடு வித்தக தத்துவ
விகிர்த சரண்சரணே 4.

இ-ள் ஆரிய - குருவே - ஆண்டவரே - என் போன்ற அபக்குவிகளையும், ஆட்கொள்ளும் பண்புடையவரே - தத்துவ வித்தக - யதார்த்தமான ஞானபர ராகிய - விகிர்த - கடவுளே - குட்டய - குட்டய்யாவென்னும் தேசிக மணியே - சரண் சரண் - தேவரீருடைய திருவடிகட்கு நமஸ்காரம் நமஸ்காரம் - கொஞ்சு குயின்மொழி - கொஞ்சிக் குலாவிப் பேசும் குயில் போன்ற இனிய வசன சாதுர்யமுடைய- வஞ்சியர் - வஞ்சிக்கொடி போன்ற மருங்குல் அமைந்த மனைவியரும் - அம்சுதர் - அழகிய புதல்வரும் - கோலம் உறும் நவநவ கோலாகல உல்லாச வனப்பைத் தருகின்ற பொன்முதலிய பொருள்களும் - ஆதிய வாதைசெய் - முதலிய ஏடணாத்திரயத்தால் பாதிக்கப்

பட்டு அதனல் - நெஞ்சகம் அஞ்சிய - மனம் நொந்து வருந்திப் பீதியடைந்துள்ள - பஞ்சை - அற்பனுகிய அடியேன் மலர்க்கழல் - தேவரீருடைய திருவடித் தாமரையினிடத்தில் - நேசமதாகவே - பக்தி சிரத்தை விஸ்வாசத்துடனே - தஞ்சம் அடைந்தனன் - அடைக் கலம் புகுந்தேன் - அஞ்சல் அளித்தருள் - அபயம் தந்தருளும் - என்றனை ஆண்டருளும் - அடியேனை யாட்கொள்ளும் - கதி முத்தியினை - விஞ்ச - மிகவும் (சாக்ஷாத்தாக) அளித்திடும் - கொடுக்கத்தக்க - வேதனம் ஆக்கிடு - ஞானத்தைத் தந்தருளும் பிரபு- ஏ அசை.

மண்ணவர் பண்ணவர் மாதவர் போதனர்
மாமுனி வேதியர் பூதியர் போற்றிடு
கண்ணகல் ஞால மடந்தை யெனுங்கனி
கண்முக மாய்நல கவிஞெளி வீசிடு
திண்ணிய பாண்டிய நாடதில் மன்னிய
தேமது ரைத்தல மேவிய தேசிக
புண்ணிய கண்ணிய குட்டய போதக பூரண
காரண பூமக வாழியே. 5

இ—ள் மண்ணவர் — மண்ணுலக வாசிகளும் - பண்ணவர் — தேவர்களும் மாதவர் — மகாதவசிரேஷ்டர்களும் — போதனர் — ஞானிகளும் — மாமுனி — பெருமைமிக்க மனனசீலர்களும் — வேதியர் — வேத விப்ரர்களாகிய பிராமண சீலர்களும் — பூதியர் — ஐஸ்வரியவான்களும் — போற்றிடு — வணங்கத்தக்க மகிமை வாய்ந்த கண்ணகல் — இடமகன்ற அதாவது விசாலமான பெருமை வாய்ந்த ஞாலமடந்தை எனும் களி— பூமிதேவி என்கின்ற கன்னிகையினது - கண்— மலர்ந்த அதாவது படர்ந்த (இடமகன்ற) முகம் — வதனமென்று கூறும்படியாகவுள்ள — நல் — நல்ல அதாவது சோபை நிறைந்த—கவின் - அழகியஒளி — பிரகாசத்தை வீசிடு - பரவச்செய்கின்ற — திண்ணிய - திடமாக அதாவது நிச்சயமாக நன்மை பயக்கத்தக்க - பாண்டியநாட்டில் - பாண்டிவளநாட்டின்கண் — மன்னிய— தலைநகரமாகப் பொருந்திய — தேம் மதுரைத்தலம் - வாசனை பொருந்திய (மலர்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த கழனிகள் வாய்ந்த) மதுரை மாநகரத்தின் கண்ணே மேவிய விற்றிருந்தருளாநின்ற - தேசிக - குருநாதா - புண்ணிய - தர்மசொருபியாகவும் - போதக ஞானபரராகவும் - பூரண - பரிபூரணராகவும் - காரண செகத் காரணசொருபியாகவும் - பூ - மேன்மைதங்கிய-

மக – மனிதசிரேஷ்டராகவும் - கண்ணரிய - எண்ணுதற் குரிய - குட்டைய - குட்டைய ஞானதேசிக மணியே - வாழி - தேவரீர் வாழி வாழி நீடூழி வாழி - ஏ - அசை

சிரக மேவிய தேவ கல்யாணசிதம்பர
விஞ்சிய தேசிக நாயக
பாரக மன்னிய பாவன குட்டய
மீன விலோசனி பத்திக
நேரக நத்திதன் மண்டபங் கட்டிய
நீர்மையவந்தித அன்ப ருகந்தவ
வோரகர் தேர்தரு தாரக மந்திர
மோர்வுறு வித்தவ வுத்தம ரேநம: 6

இ – ள் - சீர் அகம் மேவிய - சிறந்த தண்ணருள் நிறையப்பட்ட, மனோபாவம் படைத்த - தேவ - தேஜிவடிவரே கல்யாண - இன்பகரமானவரே - சிதம்பர சிதாகாச சொருபரே - விஞ்சிய - மேலான - தேசிகநாயக குரு சிரேஷ்டரே - பாரகம் - பூவுலகில் - மன்னிய - நிலைபெற்ற பாவன - பரிசுத்தரே - பான்மொழி - பாவினும் இனிய சொல்லையுடைய - மீனவிலோசனி - அங்கயற் கண்ணியினிடத்தில் பத்திக பத்தியுடையவரே - நேர் அக நேர்மையான உள்ளம் படைத்தவரே - நந்தி தன்

மண்டபம் கட்டிய சொக்கலிங்கம் சன்னதியின் கண்ணுள்ள நந்தி மண்டபங் கட்டியருளிய நீர்மைய தன்மையுடையயவரே - வந்தித அன்பர் உகந்தவ-வணங்குகின்ற பக்தவத்சலரே - ஓர்அகர் தேர்தரு - ஏகாக்கிர சித்த முடையவர்களால் தெளிவாக அறியத் தக்க – தாரக மந்திரம் தாரஹப் பிரஹ்ம மந்திரத்தை ஓர்வுறுவித்தவ–அடியேன் உணரும்படி செய்தவரே குட்டய்யா என்னும் திருநாமம் அமையப்பெற்ற ஞான தேசிக சிரேஷ்டரே-நம: - தேவரீகுக்கு வணாக்கம்' வணக்கம் செய்கிறேன், அடியேனை ரக்ஷித்தருளும் பிரபு)

அற்றவர் நற்றவர் கற்றவர் போற்றிடு
மக்கர சொக்கரிடங்கொளு மந்தரி
வெற்றி தருந்திரு வித்தகி மாலினி
வீர புரத்தரி யாரணி காரணிசீ
கொற்றவர் நத்திடு கோமளை யாமளை
குங்கும கொங்கை யிலங்கிய சங்கரி
குற்ற மறுத்தெனை யாண்ட கயக்கணி
குட்டபசாமி யுளங்கொளு தெய்வமே. 7

இ ள் அற்றவர்-பற்றற விட்ட பண்புறு,துறவரும் நற்றவர்-பவமற நோற்கும், பாவன தவத்தரும்-கற்றவர்- (பழுதறக் கற்ற, பண்டிதமணிகளும் -போற்றிடும் - அனவரதந் தொழும் (அரும்பெரும் பொருளாகிய) - அக்கர சொக்கர் அக்ஷரசொரூபியாகிய சொக்கலிங்கப் பெருமானது. - இடங்கொளும் இடப்பாகத்தையே இடமாகக் கொண்டு வாழும் அந்தரி -ஆகாச வடிவி, வெற்றிதரும் திரு நம்பின மெய்யடியார்க்கு சர்வகாரியத்திலும், ஜெயமே யளித்திடும் விஜய லக்ஷ்மி வித்தகி ஞானசொரூபினி மாலினி நாராயணி விரபுரம் - தரி. (எதிர்த்து வந்த) வீரர்களது உடலங்களை வெட்டி எறிபவள், ஆரணி - வேதநாயகி - காரணி - சர்வஜகத் காரணபூதை - கொற்றவர். நந்திரு - வெற்றி வீரப்பிரதாபமுடைய சுத்தவீரர்களால் விருப்புற்றுத் தொழத்தக்க கோமளை அழகிய திருமேனியை யுடையவள். யாமளை - சியாமள மேனியள் குங்குமம் இலங்கிய கொங்கை - குங்குமக் குழம்பணிந்து விளங்காநின்ற தனபாரத்தை யுடைய சங்கரி - பரமேஸ்வரி பரமானந்த வடிவி, குற்றம் அறுத்து-சர்வ தோஷங்களையும் நிர்வர்த்தித்து எனையாண்ட-நாயிற் கடையாம் நாயேனை நயந்து ஆண்டு கொண்ட கயற்கணி - மீனாக்ஷியம்மையே- குட்டயசாமி

யுளங்கொளு தெய்வம் குட்டய ஞானதேசிகரது மனத்தையே கோயிலாகக் கொண்டு அனவரதம் அகலாது, வீற்றிருக்கும் தேவதையாம் 'ஆனதால் அம்பிகையால் தரும் அனைத்தாம் பலனும் குட்டய்யாவால் கொடுக்க முடியும். அதனால் பக்தி புண்ணியங்களை யடைய வேண்டிய அடியார்கள். அன்பர்கள் திரிகரண சுத்தியுடனும் தெய்வீக புத்தி யுடனும் குட்டய்யஞான தேசிகரை வழிபடல் வழக்காம் ஏ; அசை-7

உம்பரு மிம்பரு மன்பரு ணண்பரு
முற்றக நெக்கு வுளங்களி கொண்டிடும்
எம்பெரு மம்பிகை யன்ப ருளங்கொளு
மேக பராபரி சோக நிராகரி
நம்பெரு மான்றிரு நாயகி மாலினி
நாரணி பூரணி காரணி குட்டய
செம்பொருள் தேர்ந்திடு தேசிக மாமணி
சிந்தை யிலங்கிய தேவி நமோநம: 8

இ—ள். உம்பரும்-பரவுலக வாசிகளும்-இம்பரும்-இகவுலக வாசிகளும்-அன்பு அருள் நண்பரும்- அன்பையும் அருளையும் உறவாகக் கொண்டவர்களும்

உற்று - சன்னதியடைந்து (தரிசனம் செய்து, அகம் நெக்கு - மனம் உருகி- உளங்களி கொண்டிடும்- இருதயத்தின் கண்ணே சந்தோஷத்தை யடையத் தக்க - எம்பெரும் அம்பிகை-எமது பெருமை வாய்ந்த மாதா - அன்பர் உளங்கொளும்- (பக்தி புண்ணியங் களுடைய அடியார்கள் உள்ளத்தையே கோவிலாகக் கொண்டு உறையும் - ஏகபராபரி-அத்வைத உன்னத சொரூபிணி - சோகநிராகரி - (சரணடைந்த அடியார் களது) துன்பத்தை நிவர்த்திக்கப்பட்டவள்- நம் பெருமான் திருநாயகி . நமது சொக்கலிக்கப் பெரு மான் திருநாயகி - நமது சொக்கலிங்கப் பெருமானது அழகிய தலைவி மாலினி - (தனது பக்தரல்லாதவர் கட்கு) மயக்கத்தை யுண்டுபண்ணுபவள் - நாரணி நாராயணி (வைஷ்ணவி) பூரணி - பரிபூரண சொரூபிணி - காரணி - செகத் காரணவடிவி. செம் பொருள் - செவ்விய பரப்பிரஹ்மவஸ்துவை தேர்ந் திடு- சாக்ஷாத் கரித்திருக்கின்ற-குட்டய தேசிகமாமணி குட்டய்யா வென்னும் தேசிகமணி குட்டய்யா வென் னும் தேசிகமணியினது சிந்தை யிலங்கிய- திரு வுள்ளத்தின் கண் (ஆனந்த சொருபமாக விளங்கிக் கொண்டிருக்கிற - தேவி - மீனாக்ஷியம்மையே, நமோ நம; உனக்கு நமஸ்காரம் நமஸ்காரம், (எனது மனதின்

கண்ணுள்ள சர்வாபீஷ்ட சித்திகளையும் குட்டய்ய ஞானதேசிகர் வாயிலாகத் தந்தருள வேண்டுந் தேவி,

பிஞ்சு மதிக்கலை கங்கை யராவணி பிஞ்ஞக
வேணியன் மங்கையோர் பங்கினன்
நஞ்சமர் கந்திரன் நாகமர் ஏற்றினன்
நாரணர் மாதவர் நான்முகர் வந்தித
குஞ்சித பாதனங் குட்டயர் மேவிய கோமள
மேனியன் கூட லுவந்தவன்
கஞ்ச மலர்க்கழல் அஞ்சலி செயமிகு
காரண காரிய மாமயல் போமே. 9

இ-ள் பிஞ்சு - முற்றுத-மதி - சந்திரனது - கலை- மூன்றும் பிறையினையும் - கங்கை - ஆகாயகங்கையினை யும் — அரா சர்ப்பத்தினையும் - அணி - அணிந்திருக் கின்ற - பிஞ்ஞக - பின்னலமைந்திருக்கின்ற வேணி யன் -சடா பாரத்தை யுடையவனும்- மங்கை ஓர் பங்கினன் - உமா மகேஸ்வரியை இடதுபாகத்தின் கண் வைத்திருக்கப்பட்டவனும்-நஞ்சு அமர் இந்திரன் ஆலகால விஷத்தைக் கண்டத்தின் கண் வைத்திருக் கின்றவனும்-நாகு அமர் ஏற்றினன்-இளமை பொருந் திய ரிஷபத்தை வாகனமாகவுடையவனும் நாரணர்

மாதவர் நான்முகர் வந்தித - மகா விஷ்ணுவும் மகா தவசிரேஷ்டர்களும் பிரமாவும் வணங்கப்பட்ட குஞ்சிதபாதன் தூக்கிய பாதத்தை யுடையவனும்-நம் குட்டையர் மேவிய நமது குட்டைய ஞானதேசிகரால் அனன்னியமாகச் சதாகாலமும் பொருந்தியிருக்கின்ற - கோமள மேனியன் - அழகிய சொருபமுடையவனும் கூடல் உவந்தவன் - மதுரை மாநகரத்தின் கண்ணே (எப்போதும்) சந்தோஷமாக, வசித்துக் கொண்டிருக்கிறவனும் ஆகிய சொக்கலிங்கப்பெருமானது கஞ்சமலர்க் கழல்-தாமரை மலர்போன்ற திருவடியை அஞ்சலிசெய வணக்கம் செய்துவர காரண காரிய-காரண ரூபமாகவும் காரிய ரூபமாகவும் பொருந்தியிருக்கின்ற- மா-மாயையினது மிகு-அதிகரித்துள்ள - மயல்-மயக்கம் அதாவது விபரீத பாவனை-போம்-அத்தியந்தமாக நீங்கிவிடும். ஏ. அசை

வேறு

அடலை யெனச்சில பகலி லடைந்திடு மவல
மிகுத்துள கவலைச் சாகர
உடலை நினைத்துணை யுறுதி திடப்பட வுணர
விலக்கண முடைமை தெரிந்திலன்

நடலை மிகுந்திடு அசடுளே கசடனின்
நலனை யறிந்துன தடியிணை மலர்தொழக்
கடலை நிகர்த்தருள் காட்டிய குட்டய
கருணையளித்தெனையாண்டிட வேண்டுமே 10

இ-ள் கடலைநிகர்த்து-சாகரம் போன்று-அருள் கிருபை (தன்னிடத்தில் உளதென, காட்டிய, அடியேனுக்கு, தோற்றுவித்த - குட்டய - குட்டய ஞான தேசிக சிகாமணியே - சில பகலில் - சிறிது நாளையில் அடலை என அடைந்திடும்-சாம்பல் என்று கூறும்படி (கெட்டுப்,போகத் தக்கதும் அவலம் மிகுத்துஉள பயனற்றவைகளையே பாரித்து தோற்றுவித்து. உறைவதும்-கவலைச் சாகர(ம்) துன்ப சமுத்திரமும் ஆகிய உடலை-தேகத்தை நினைத்து-(நித்த பல சுக சாதனமெனக்;) கருதி - உனை-கருணாமூர்த்தி யாகிய, தேவரீரை - உறுதி - நிச்சயமானது-திடப்பட - மாறு திருக்குமாறு-உணர - அறிந்துகொள்ள- இலக்கண முடைமை- (சச்சிதானந்தாதி சொரூப) லக்ஷண முடையபிரஹ்ம சொரூபி என்று - தெரிந்திலன் - நன்கு, உணர்ந்தேன் இல்லை - நடலை மிகுத்திடு - பொய் வஞ்சகம் அதிகரித்துள்ள - அசகுன - பகுத்தறிவற்ற - கசடனின் - அற்பனாகிய என்னுடைய -

நலனையறிந்து - நன்மையை உத்தேசித்து - உனது - தேவரீரது - அடியினை மலர்தொழ - உபயபாத தாமரைகளை வணங்குமாறு - கருணை அளித்து - அருளைக்கொடுத்து-ஏனை- (நீக்கு வேறு அற்ற) அடியேனை-ஆண்டிட வேண்டும்-கருணை கூர்ந்து ரக்ஷிக்க வேண்டும் பிரபு நீயே. அருள் செய்யின் அல்லாது பொய் நெஞ்ச வஞ்சத் தீயேன் உனை வந்து அடைதற்கு ஒரு செய்கையும் கண்டேன் இல்லை. ஆதலால் எனை ஆண்டருள் புரிவாய் அப்பா - ஏ. அசை-

பொருளை நினைத்துழல் புலையனை யலையனைப்புகழை
மதித்துழல் கடையனை மடையனை
நருளை யரிந்துபுல் நடிகனை யடியனை நவையி
லழிந்துழல் சிவசுக னிவனுன
தருளை யுவந்துன தடியரு ளுறவருள் அகமம
மறவொரு கருணையு முறவருள்
தெருளை யுணர்ந்தொரு சுகமுற வருள்புரி
தினகர குட்டய தேசிக மணியே. ||

இ-ள் தினகர-அடியவர் உளத்துறை அஞ்ஞான இருளை அகற்றவல்ல ஞானுதித்தராய் விளங்கும் -

குட்டய தேசிக மணியே – குட்டய்யா என்னும் தேசிக சிரோரத்தினமே –பொருளை நினைத்து உழல் – பொன் ஆதியவாம்; திரவியங்களையே பெரிதெனக் கருதி வெம் புன்மை செய்து, வருந்துகின்ற – புலையனை யலையனை – நீசத்துவமும் சலனத்துவமும் உடைய (மிடியனும்)-புகழை மதித்துழல் - பெருமையைப் பாராட்டி பேதைமை அடைந்து தபிக்கின்ற-கடையனை மடையனை – தாழ்மையானவனும் அறிவற்றவனும் ஆகிய அடியனும் – நருளை–சனக்கூட்டத்தை-அறிந்து உழல் – உணர்ந்து அவர்கட்கு தக்காவாறு நடித்து பரிதபிக்கின்ற – நடிகனை யடியனை – நாடகனும் தொழும்பனுமாகிய படிறனும்–நவையில் அழிந்துழல்– பஞ்சமா பாதகங்களில் படிந்து – இரங்குகின்ற அதாவது அழுந்துகின்ற மடியனும் ஆகிய சிவசாகன் இவன் – சிவானந்தம் என்னும் நாமம் உடைய இந்த நாயேன் - உனது அருளை யுவந்து-தேவரீரது திருவருளின் மகத்துவத்தைக் கண்டு மகிழ்ந்து – உனது அடியருள் உற அருள் - தேவரீரது சீடர் கூட்டத்துள் ஒருவனுக வசிக்குமாறு செய்யவேண்டும்– அகம்மமம் அற – அகங்காரம் மமகாரங்கள் நீங்குமாறு ஒரு கருணையும் உற அருள் – ஒப்பற்ற கிருபையையும் மிகவுந்தாரும் – தெருளை யுணர்ந்து – ஞான

சொருபத்தையறிந்து – ஒரு சுகம் உற அருள்புரி – ஒப் பற்ற பிரமானந்தத்தையடைய அபார காருண்யத்தை யும் செய்யவேண்டும் பிரபு.

முற்றும்.

பயன்

குட்டய்ய தேசிகரின் குன்ருப் புகழி தனைத்
தட்டாமல், நித்தியமும் சாற்றிடுவோர் – திட்டமாய்ச்
செல்வமுங் கல்வியும் சீரும் மனைவிமகர்
சொல்வளமும் சூழ்வர் சுகம்

——

ஸ்ரீ காளையார் கோவில் வேதாந்த மடாலயத்தின் ஆதிகுரு செல்லப்பஞான தேசிகசுவாமி அவர்கள்மீது

இளையான்குடி வேதாந்தமடம்

ஸ்ரீ சிவானந்தசுவாமியவர்கள் பாடிய

தோத்திரப்பாக்கள் மூலமும் உரையும்

சீதலி ரஞ்சித பாத சரோருக தேவரும் அஞ்சலி யோது குருபாகர
மாதொரு பங்குடை நாதனு மச்சுத மாதவனும் மலர்மே யவனும்புகழ்
வேத மளந்துரை வேதன தத்துவ மேல வருந்தொழு மேதகவித்தக
ஆதல் அழிந்தவர் சாதல் ஒழிந்தவர் ஆரிய செல்லப்ப ஆண்டவரே நம:-1

இதன் பதப் பொருள்-சீதள(ம்) – குளிர்ச்சியுடையதும்-ரஞ்சிதம்-பிரியமுடையதும் ஆகிய-சரோருகம்-செந்தாமரை மலர் போன்ற – பாத - திருவடியுடைய

வரே-தேவரும்- தேவர்களும் முனிவர் சித்தர் வித்தியா தரர்களும் - அஞ்சலி - வணங்கி - ஓதும் கீர்த்திக்கத் தக்க - கிருப ஆகர் - கருணுசொருபியே - மாதொரு பங்குடை நாதனும் - மங்கை ப ங் கா ள ஞ கிய சிவ பெருமானும் -அச்சுத மாதவனும் - நாசரகிதனும் லக்ஷிமிபதியுமான நாராயணனும் - மலர்மேயவனும் பத்மாலயத்தின்கண் விற்றிருக்கும் பிரமதேவனும்- புகழ் - கீர்த்திக்கத்தக்கது - வேதம் - அ ஞ தி யு ம் அபௌர்ஷேயமும் ஆகிய சுருதியாம் - அளந்துரை- அந்தச் சுருதிகளால் அளவிட்டு நிர்ணயித்துக் கூறத்தக்கது - வேதனம் - அறிவு சொருமான பிரஹ்மவஸ்துவாம் - தத்துவ மேலவரும் தொழும் அந்தப் பிரஹ்மான்ம ஐக்ய ஞானமுடைய மகான்களும் சிந்தித்து வந்திக்கத்தக்க - மேதக வித்தக - மேன்மை தங்கிய ஞானமுடையவரே - ஆதல் அழிந்தவர் - சிவ ஞானத் தெப்பத்திலேறி பிறவிப் பெருங்கடல் கடந்த பேரறிவாளர்களாகிய ஞானவான்களுக்கும் - சாதல் ஒழிந்தவர் - மாகவெளி செல்லும் வேகமாம் வாசிக்கு மேடேது பள்ளமேது என்றபடி வாசிபிடித்து சரா மரணமற்ற யோகவான்களுக்கும் - ஆரிய ஆசாரியத் தன்மை வாய்ந்தவரே - செல்லப்ப - செல்லப்பர் என்னும் திருநாமம் உடையவரே -ஆண்டவரே -

அபக்குவிகளையும் தனது தபயோக ஞான வலிமையால் பக்குவிகளாக்கி ஆட்கொண்டருளிய குருதேவா நம: - தேவரீர் திருவடிக்கு நமஸ்காரம் என்றவாறு

ஆருட விஞ்சிய சீருடை நெஞ்சக மாறிட வென்றவ
காருட மன்றவ
பாரிட வஞ்சக ரோரிட வின்றிய பாரிட மத்தகர் நேரிட
லன்றிய
ஏரிட மன்னிய வோரிட முற்றவ ஏறிடை நஞ்சமர் வீறிட
கண்டரை
நேரிடை மங்கையி னேறுே வித்தவ நேருறு செல்லப்ப
தேசிக ரேநம: - 2

இ-லர் ஆருட - சொருபாரூடரே அதாவது சத்வாபத்தி என்னும் நான்காம் பூமியில் ஆரோகணித் திருப்பவரே - விஞ்சிய - மிகுந்த - சீருடை - மைத்திரி கருணை முதிதை உபேக்ஷை என்னும் சற்குணங்களாகிய சிறப்புப் பொருந்திய - நெஞ்சகம் - மனமானது - ஆறிட - உபசாந்த மடையுமாறு - வென்றவ - ரசோதமோ குணங்களின் கோரமூட விருத்திகள் தலை எடுக்க வொட்டாமல் கெகுத்துச் செய்த்தவரே - காருடம் மன்தவ - வினயமான -

அதாவது சுருக்கமும் இலகுவும் ஆன தபசு (மனம் பொறிகட்கு ஒருமை ரூபதவமு) டையவரே - பாரிட வஞ்சகர் - பூமியினிடமாக வுள்ள வஞ்சகர் கவால் - ஓரிடவின்றிய - ஆராய்ந்து அறிய முடியாததும் - பாரிட மத்தகர் - பைசாச சுபாவம்முடைய உன்மத்தர் களால் - நேரிடல் அன்றிய - சந்திக்க முடியாதது மான - இடஏர் - மன்ணரிய - விசாலமான அதாவது மிகுந்த அழகு பொருந்திய - ஓர் இடம் உற்றவ - ஒப்பற்ற பிரமஹ்ம பதத்தை யடைந்தவரே - நஞ்சமர் - ஆல்கால விஷம் பொருந்தி - வீறு - பிரகாசித்துக் கொண்டிருக்கிற - இடகண்டரை - விசாலமான நீல கண்டத்தையுடைய சிவபெருமானை - மங்கையினோடு - பார்வதி சமேதராய் - ஏறிடை - ரிஷபாரூடராய் - நேரிடை - சாக்ஷாத் பிரத்திய க்ஷமாய் - உறுவித்தவ- காட்சியளிக்குமாறு செய்தருளியவரே - நேர்உறு - நேர்மை வாய்ந்த - செல்லப்ப தேசிகரே நம :- செல்லப்ப ஞானதேசிகசிகாமணியே (தேவரீர் திரு வடிக்கு மனமார்ந்த வணக்கம் சமர்ப்பிக்கின்றேன் அடியேனை ஆதரிக்க வேண்டும் பிரபு 12.

கச்சணி மங்கையர் நச்சிய பொன்மகர் கச்சக
விச்சையை மெச்சிய நற்றவர்
வச்சல மெய்ச்சுக நிச்சல வச்சுத வத்துவை
நத்திய அத்வித தத்துவ.
உச்சக ரட்சக துச்சக விச்சக முய்த்துணர்
வித்து ஒடுங்குறு வித்தவ.
சச்சித நற்சுக சத்குண வுத்தம சற்குரு
செல்லப்ப நித்த நமோநம. 3

இ-ள் - நச்சிய – (தேவர் மா முனிவர். அசுரர் வாழ ரக்கர் சித்தர் வித்தியாகரர் முதலிய யாவரும்) விரும்பத் தக்க - கச்சணி மங்கையர் – கச்சணிந்த கனதனக் காரிகையரும் - பொன் – பொன் பூமி முதலிய ஐஸ்வரியங்களும் - மகர் - மக்களும் ஆகிய மூவகைப் பதார்த்தங்களிடத்தும் - ஏற்பட்டுள்ள - அகவிச்சையை - மனோரதத்தை - கச்சு - வெறுத்து அதாவது அத்தியந்தமாக மூவேடணையையும் விட்டு செய்து கொண்டு வருகின்ற - நற்றவர் - நல்ல தவ சிரோமணிகளால் - மெச்சிய - நன்கு மதிக்கத்தக்க- வச்சல - பக்தவச்சலரே - மெய்ச்சுக - சத்திய சுக முடையவரே - நிச்சல - சலனமற்றவரே - அச்சுத

வத்துவை - நாசரகித பரமாத்மாவை - நத்திய - விரும்பியடைந்த - தத்துவ அத்துவித - யதார்த்த மான அத்வைத ஞானமுடையவரே - உச்சக - உயர் வானவரே - ரட்சக - சரணடைந்த பரிபக்குவ அதி காரிகளை ஆதரித்துக் காப்பாற்றும் பரமதயா நிதியே- துச்சக - இச்சகம் - அற்பமான இந்த வுலக இன் பத்தை - உய்த்து, உணர்வித்து - (அசுத்தம் துக்கம் அநித்தியம் என்று) ஆராய்ந்து அறியும் படி செய்து- ஒடுங்குறு வித்தவ - அது சம்பந்தமான ஆசையை அடங்கும்படி செய்தவரே - நற்சத்சித சுக - நல்ல சச்சிதானந்த சொருபரே - உத்தம சத்குண - மேலான நல்லமைத் திரியாதி சத்குணங்கள் நிறையப் பட்டவரே - நித்த - நித்தியமானவரே - உத்தம சற் குரு செல்லப்ப - மதிப்புக்குரிய சத்குரு சிரேஷ்ட செல்லப்ப ஞான தேசிக சிகாமணியே - நமோ நம:- தேவரீர் திருவடிக்கு நமஸ்காரம் நமஸ்காரம் - 3

பார கல்யாண பரம்பர விஞ்சிய பாரக மாரக
பாமன ராகவ

சீரக வாரக சீட மனோகர சீவக பாவக
தேவக மேவிய

தாரக மோரக தாவர சங்கம சாஸ்வத மான
தயாபர நெஞ்சக.
காரக சூசக காமிக வாசக காரண செல்லப்ப
காருண்ய ரேநம: 4.

இ-ள் - பாரகல்யாண - மிகுந்த சுகம் உடையவரே - பரம்பர - மிகப் பெரியவரே - மிஞ்சிய பாரக(ம்) மாரக - மிகவும் பெரிய அகங்காரத்தைக் கொன்றவரே - பா மன ராகவ - பிரகாச வடிவ மனத்தின் கண் ஆத்ம பரவசமாய் ரமித்துக் கொண்டிருப்பவரே - சீரக(ம்) - சிறப்புப் பொருந்திய மனத்தினிடத்தில்-வாரக - தேவரீரிடத்தில் உரிமை வாய்ந்துள்ள - சீடமனோகர - சிஷ்யர்களது மனதைச் சந்தோஷப் படுத்துபவரே - சீவக - பாரிபாக விசிட்ட சீவர்களுடைய - பாவகம் - கருத்தின் கண்ணே - மேவிய - பொருந்தியுள்ள - தேவக - பிரகாசவடிவரே - தாரகம் ஓர் அக-தாரகப் பிரஹ்மத்தை அறிந்து கொண்டிருக்கிற மனத்தையுடையவரே - தாவர சங்கம - நிற்பன நடப்பன வான சர்வ பிராணிகளிடத்திலும் - சாஸ்வதமான-நிலைபெற்ற - தயா - தயவு தாக்ஷண்ணியம் நிறைந்துள்ள - பரநெஞ்சக - மேலான இருதயம் படைத்தவரே - காமிக - தர்ம உப தேசம் செய்பவராகிய

காமிகாசாரியரே - சூசக - விவேகத்தால் சாந்திதாந்தி முதலிய சற்குணங்களை உபதேசிப்பவராகிய சூசகா சாரியரே - வாசக - விஷயங்களை அசுத்தம் துக்கம் அநித்தமெனக் கூறி நிவர்த்திக்கச் செய்து ஆன்மா வினிடத்தில் ஆதிகமான விருப்பத்தைத் தரத் தக்க உபதேசம் செய்பவராகிய வாசகா சாரியரே - காரக - பிரஹ்மான் மைக்ய ஞானோபதேசம் செய்பவராகிய காரகா சாரியரே காரண உபதேசத்தால் ஐயந்த விர்த்து நிலைத்த குற்றமற்ற ஞானமும், ஞான வாயி லாக - மோக்ஷமும் தரத்தக்க காரண வடிவ விகிதா சாரியராகிய - செல்லப்ப காருண்யரே நம:- செல்லப்ப நாமம் படைத்த காருண்ய குருமூர்த்தியே தேவரீர் திருவடிக் குப்பல் கோடி நமஸ்காரம் புரிகிறேன் அடி யேனை ஆதரித்து ஆளும் பிரபு -

பங்கய வெண்மலர் தங்கிய வங்கனி பாமகள்
கொங்கை நயங்கொளு மம்புயன்
அங்கை யிலங்கிய சங்கொடு சக்கரம் அலர்மகள்
தங்கிய வாகம னச்சுதன்
மங்கை யிலங்கிய பங்கொடு மான்மழு வரவமு
மபயமு மானுடை யோன்புகழ்
சங்கர விங்கித தன்பொழில் காணைமன் சற்குரு
செல்லப்ப சரணம லர்க்கழலே 5

இ-ள் வெண் பங்கய மலர் - வெண்டாமரைமலர் மீது - தங்கிய அம்கனி - வீற்றிருக்கும் அழகிய - கன்னிகை யாகிய - பாமகள் கொங்கை நயங்கொளும் அம்புயன் - கலைமகளின் தனத்தால் ஏற்பட்ட இன்பத்தை யனுபவிக்கின்ற அழகிய புயத்தையுடைய பிரமாவும் - சங்கு ஒரு சக்கரம் இலங்கிய அம் கை - பாஞ்சசன்னியம் என்னும் சங்கும் சுதர்சனம் என்னும் சக்கரமும் பொருந்தி விளங்கா நின்ற அழகிய கரதலமும்-அலர்மகள் தங்கிய ஆகம்மன் - செந்தாமரைச் செல்வி வீற்றிருக்கும் மார்பகமும் உடைய அச்சுதன் - மகாவிஷ்ணுவும்-மங்கையிலங்கியபங்குஉமா மகேஸ்வரி பொருந்தி விளங்கா நின்ற இடது பாகமும்-மான்மழு-மான்மழு தரித்த - கரமும் - வரதமும் அபயமும் - வரத அபய கரமும் - ஆன் - ரிஷபமும் - உடையோன் - உடைய ருத்திரமூர்த்தியும் ஆகிய திருமூர்த்திகளும் - புகழ் - வியந்து ஓதத்தக்க - சங்கர - பேரின்ப வடிவ சுகசொருபியே - இங்கித இனிய வசன சாதுர்ய முடையவரே - தண்பொழில் கானமன் செல்லப்ப சற்குரு - குளிர்ச்சி பொருந்திய சோலைகள் சூழ்ந்த கானப்பேரூர் என்னும் காளையார் கோவிலில் கோயில் கொண்டிருக்கும் செல்லப்ப ஞானதேசிகபரரே மலர்க்கழல் சரணே - தேவரீருடைய திருவடிக்கமலமே

தஞ்சமென வந்தடைந்தேன் அடியேனை ஆதரிக்க வேண்டும் பிரபு- ஒரு இரண்டும் எண்ணிடைச்சொல்.

வேறு

கற்கவிடர் நற்கலைகள் கற்பித்த ஜோதிநம:
நற்பரம தற்சொருப நாதாந்த போதநம:
பொற்பதும நற்சிகை பொறிதத்திரு பாதநம:
சிற்பொருளை யெற்கருளு செல்லப்ப தேவநமவே. 6

இ-ள் கற்க இடர்-படிக்க மிகப்பரி சிரமமாயுள்ள நற்கலைகள்-நல்ல உயர்வான அக்யான்ம வித்தைகளை-கற்பித்த - தனது அனுக்கிரகத்தால் சிரமமன்றி இலகுவாய் விரைவாய் படிப்பித்த - ஜோதிநம: - ஜோதிசொருபரே நமஸ்காரம் - நற்பரம - நல்ல உயர்வான - நாதாந்த - நாததத்துவ முடிவாயுள்ள - தத் - அந்த சொருப - பிரஹ்ம சொருபத்தை - போத நம: - போதித்த குருநாதா நமஸ்காரம் - நல்சிகை - நல்ல எளியேன் சீரமீது - பொறித்த - பதித்தருளிய அவாவது அழுத்தமாக வைத்த - பொற்பதும - அழகிய தாமரை மலர்போன்ற - திருப்பாதநம: - திருப்பாதம் உடையவரே நமஸ்காரம் சிற்பொருளை எற்கு அருளு - சேதனவஸ்துவை அடியேற்கு ஞான வாயிலாகக்

கொடுத்தருளிய செல்லப்பதேவ நமவே - செல்லப்ப ஜோதியே தேவரீருக்கு நமஸ்காரம் ஏ. அசை. 6

அண்டற் கரியபொரு ளானபர நாதநம:
விண்டற் கரியவுரை வேதாந்த போதநம:
கண்டற் கரியபொருள் காட்டுகுரு நாதநம:
தெண்டர்க் கினியநல செல்லப்ப தேவநமவே:- 7

இ-ள் அண்டற்கு அரிய பொருளான - அனதிகாரிகளாயுள்ள பாமர மக்களால் கிட்டுதற்கு அரிய வஸ்துவாயிருக்கின்ற பர நாத நம: குருபர நாதரே நமஸ்காரம் விண்டற்கு அரிய வுரை - நிர்க்குண நிர்விசேடமாயிருத்தலால் சக்தி வாக்கியத்தால் வசனிப்பதற்கு அருமை நோக்கி இலக்ஷண வாக்கியம் அமைந்துள்ள- வேதாந்த போதநம: ·உபநிடத வாக்கிய உபதேசமுடையவரே நமஸ்காரம் கண்டற்கரிய பொருள்-பிரத்தியக்ஷப்பிர ரமையால் அறியமுடியாத பிரஹம வஸ்துவை - காட்டு குருநாத நம: - சாப்திப் பிரமையால் காண்பித்த குருநாதா நமஸ்காரம்-தெண்டர்க்கு பக்தி புண்ணிய பரவசத்தால் சதாகாலமும் வந்தனை வழிபாடுசெய்து கொண்டு வருகின்ற வணக்கமுடைய அடியார்களுக்கு-இனிய நல-மிகவும் இன்பகரமான பதவியை உபதேச வாயிலாக அளிக்கத்தக்க - செல்லப்ப

தேவ நமவே-செல்லப்ப ஞானசாரியரே தேவரீருக்கு நமஸ்காரம் ஏ. அசை - 7

சித்தமல மற்றொளிரு சிவமான ஜோதிநம:
அத்துவித முத்தியரு ளறிவான தேவநம:
பத்தரொடு முத்தர்தொழு பாதார விந்தநம
சித்தியொடு முத்தியருள் செல்லப்ப தேவநமவே:- 8

இ-ள் சித்தம் மலமற்று ஒளிரும் - மனம் மாசகன்று மாசிலாமணியென விளங்கும் - சிவமான ஜோதி நம: - மங்களகரமான ஜோதி சொரூபரே நமஸ்காரம் - அத்துவித முத்தியருள் - துவிதமற்ற அகண்டைகரசவடிவ சொரூப முக்தியை உபதேச வாயிலாக அளித்தருளிய - அறிவான - தேவ நம: - சின்மாத்ர சொருப தெய்வமே நமஸ்காரம் - பத்தரொடு முத்தர் தொழு பாதாரவிந்த நம: - பத்தர்களும் முத்தர்களும் வழிபாடு செய்வதற்குத் தகுதியான பாத தாமரையுடையவரே நமஸ்காரம் சித்தியொடு முத்தியருள் செல்லப்பதேவ. நமவே - அஷ்டமா சித்திகளையும் முத்திகளையும் முறையே யோக்களுக்கும் ஞானிகளுக்கும் கொடுக்கத்தக்க செல்லப்ப ஞானசாரியரே

தேவரீருக்கு நமஸ்காரம் - ஒரு இரண்டும் எண்ணிடைச்சொல் - ஏ. அசை. 8

தன்னந் தனிப்பதவி தந்தபர நாதநம:
பொன்னம் பலத்தனடி புகுவித்த வேதநம:
என்னன்பு பற்றும்வகை இசைவித்த போதநம:
சின்னம் சிதைத்தகுரு செல்லப்ப தேவநமவே. 9

இ-ள் - தன்னந்தனிப் பதவி - மிகவும் தனிமை வாய்ந்த - அதாவது அசங்க கேவல அத்வைதமான பிரஹ்ம சொருப முத்தியை - தந்த பர நாத நம:- சிற் சடவிசார ஜன்னிய ஞான வாயிலாகக் கொடுத்தருளிய குருபர நாதா நமஸ்காரம் - பொன்னம் பலத்தனடி - புகுவித்த - கனக சபை நடனமிடு கடவுளடி சேரும்படியாயுள்ள பக்தி புண்ணிய ஞான மார்க்கங்களில் பிரவேசிக்கும்படி அனுக் கிரகித்த - வேத(ம்) நம :- அறிவு சொருபரே நமஸ்காரம் - என் அன்பு - எனது - மன நெகிழ்ச்சி வடிவ அன்பானது - பற்றும் வகை - அத்வைத மார்க்கத்தில் - திட நம்பிக்கையுடன் கவர்ச்சிகரமாய்ப் பொருந்துமாறு - இசைவித்த போத நம :- சேர்த்து வைத்த உபதேச

பரரே நமஸ்காரம் - சின்னம் சிதைத்த - அடியேன் பரிபூரண பிரஹ்ம சொருப நிலையடைய வேண்டி, தேச கால வஸ்து பரிச்சின்ன வடிவங்களைக் கெடுக்கும் படி செய்துள்ள - குரு செல்லப்ப தேவ நம:- குருபர செல்லப்ப சோதியே தேவரீர் திருவடிக்கு நமஸ்காரம் - ஏ - அசை -

அல்லற் பவப்பிணி அறுத்தபர நாதநம:
கல்லைப் பழத்தைநிகர் கனிவித்த போதநம:
வல்லைப் பதத்தைமுடி வைத்தபர நாதநம:
செல்லப்ப தேவநம செல்லப்ப தேவநமவே. 10

இ-ள் அல்லல் பவப் பிணி - துன்ப வடிவ ஜனன வெந்நோயை அறுத்த பரநாதநம: - காரணவடிவ அஞ்ஞானத்தோடு கூட அத்தியந்தமாகக் கெடுத்தருளிய குருபர நாதரே நமஸ்காரம் - கல்லைப் பழத்தை நிகர் - கற்பழமாகப் புரிதலில் - கனிவித்த போதநம:- கல்லினும் கடிய எனது மனதைத் தவயோக ஞான வன்மையால் பரிபக்குவம் அதாவது பத்தியோக ஞான வைராக்கியத்திற்கு அருகதையாகும் வண்ணம் செய்தருளிய - போத நம:- உபதேச சமர்த்தரே நமஸ்காரம் - வல்லைப் பதத்தை முடி வைத்த - அப்பக் குவி

யாகிய எளியேனைப் பக்குவி யாக்கும் பொருட்டு வலியப் பிடித்தாண்டு திருவடி தீக்ஷை செய்தருளிய- பர நாத நம:- குருபர நாதரே நமஸ்காரம் - செல்லப்ப தேவ நம: செல்லப்ப தேவ நமவே - செல்லப்ப ஞான சிகாமணியே - தேவரீரை மறித்து மறித்தும் நூரு யிரக்கால் வணங்குகின்றேன் அடியேனைக் கண்ணு கடை போகக் காப்பாற்றியருள வேண்டும் பிரபி. ஏ - அசை.

செல்லப்ப தேசிகரின் சீர்ப்பதிகம் செப்பினல்
பல்வளமும் மல்கும் பவமகலும் - கல்வியொடு
செல்வம் மனைவிமகார் சீரும் சிறந்தொளிரும்
எல்லவரும் நன்கிசைப்பி ரே -

முற்றும்

தி ... பிரஸ், காரைக்குடி. போன்: 300